

# இலங்கை: சரியான தெரிவுகளை செய்தல்

## உண்மையையும் நீதியையும் நிலைநாட்டவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கவும் பலனளிக்கக்கூடிய பொறிமுறைகளை நிறுவுதல்

**அனைவருக்கும் மனித உரிமைகள் கிடைக்க வேண்டும் என்று செயல்படுகின்ற ஏழு மில்லியன் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு உலகளாவிய இயக்கம் அம்னெஸ்டி இண்டர்நேஷனல் ஆகும்.**

**மனித உரிமைகளுக்கான உலகப் பிரகடனத்தில் இருப்பதுபோலவும், சர்வதேச மனித உரிமை தரத்திலுமான அனைத்து உரிமையும் உலகில் ஒவ்வொருவருக்கும் கிடைக்க வேண்டும் என்பது எமது இலட்சியம்.**

**எந்த ஒரு அரசாங்கத்தையுமோ, அரசியல் சித்தாந்தத்தையுமோ, பொருளாதார நலனையோ மதத்தையோ சாராத அமைப்பு சுயாதீன அமைப்பு நாங்கள். பெரும்பாலும் உறுப்புரிமைக் கட்டணம் மற்றும் பொதுமக்களின் நன்கொடைகளைக் கொண்டே நாங்கள் செயல்படுகிறோம்.**

@ அம்னெஸ்டி இண்டர் நேஷனல்
பிறவகையில் குறிப்பிடப்படதவரை இந்த ஆவணத்தில் உள்ள விஷயங்க்கள் கிரியேடிவ் காமன்ஸ் காப்புரிமம் பெற்றுள்ளது.(இதை மற்றவர்கள் பிரசுரிக்கும்போது எமது பெயரை குறிப்பிட வேண்டும், வணிக நோக்கில் பிரசுரிக்கக்கூடாது, தகவலை பிற வகையில் பயன்படுத்தக்கூடாது, சர்வதேச விதிகள் *4.0* பயன்படுத்தப்பட வேண்டும்,)
*https://creativecommons.org/licenses/by-nc-nd/4.0/legalcode*
கூடுதல் விவரம் அறிய எமது இணையதளத்தில் அனுமதிப் பக்கத்தைப் பார்க்கவும்.
*www.amnesty.org*
அம்னெஸ்டி இண்டர் நேஷனல் இல்லாத வேறு உரிமையாளருக்கு காப்புரிமம் உள்ளது என்றால் கிரியேடிவ் காமன்ஸ் காப்புரிம வகையில் இதைப் பயன்படுத்த முடியாது.

முதலில் பிரசுரிக்கப்பட்டது *2016*
பிரசுரதாரர் *Amnesty International Ltd*
*Peter Benenson House, 1 Easton Street*
*London WC1X 0DW, UK*

**ஆவணக் குறியீட்டு எண்: ASA 37/4456/2016**
**மூல மொழி: ஆங்கிலம்**

**amnesty.org**

AMNESTY INTERNATIONAL

# 1. சாராம்சம்

ஐநா மனித உரிமை மன்றத் தீர்மானம் 30/1ஐ 2015 ஒக்டோபரில் இலங்கை கொண்டுவந்து ஏற்றுக்கொண்டபோது, நாட்டில் நெடுங்காலமாக நீடித்துக்கொண்டிருக்கும் வன்முறையையும் மனித உரிமை மீறலுக்கு பொறுப்புகூறல் இல்லை என்ற நிலையையும் முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்பதை அரசாங்க அதிகாரிகள் கடைசியில் ஒருவழியாக ஏற்றுக்கொண்டார்கள். மாற்றத்துக்கான ஒரு இலட்சியமிக்க செயல் திட்டத்தை ஏற்றுக்கொள்வதாக அரசாங்கம் அறிவித்தது. கடந்த காலங்களில் நடந்த குற்றங்களுக்கு சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்து, உண்மை வெளிகொணரப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என அரசாங்கம் வாக்குறுதி அளித்தது. அப்படியான குற்றங்களை எதிர்காலத்தில் தவிர்க்கும் சீர்திருத்தங்கள் செய்யப்படும் என்றும் உறுதியளித்தது.

இந்த பணி மிகவும் அவசியமானது. இலங்கையின் மனித உரிமை நிலவரத்தை நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக அம்னெஸ்டி இண்டர்நேஷனல் அவதானித்தும் அதுபற்றி தகவல் வெளியிட்டும் வருகிறது. நாட்டில் அடுத்தடுத்து நடந்த வன்முறைமிக்க கிளர்ச்சி, நெடுங்காலமாக நாட்டை முடங்கச் செய்த அரச படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஆயுத மோதல்(எல் டி டி இ எனப்படும் இந்த கிளர்ச்சிக் குழு நாட்டின் வடக்கிலும் கிழக்கிலுமாக தமிழ் சிறுபான்மை மக்களுக்கு தனிநாடு வேண்டும் என்று போராடியது), இந்த சவால்களுக்கு பதிலாக அரசாங்கம் முன்னெடுத்த மூர்க்கத்தனமான நடவடிக்கைகள் ஆகிவற்றை நாடு சந்தித்துவந்துள்ளது.[1] தேசபாதுகாப்பின்

---

[1] 1971ல் இலங்கையின் இடதுசாரி சிங்கள அமைப்பான மக்கள் விடுதலை முன்னணி @ ஜேவிபி மேற்கொண்ட ஆயுதக் கிளர்ச்சியை அரசாங்கம் வலுக்கரம் கொண்டு நசுக்கியது, பின்னர் 1989-1990 காலகட்டத்தில் பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டது, 30,000 முதல் 60,000 வரையிலானோர் பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு காணாமல்போனது, மேலும் பல்லாயிரக்கணக்கானோர் தடுத்துவைக்கப்பட்டு சித்ரவதை செய்யப்பட்டது ஆகியவை இதில் அடங்கும். ஜூலை 1983 முதல் 2009 மே வரையிலான காலகட்டத்தில் அரச படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடந்த ஆயுத மோதலில் இருதரப்பினராலுமே பொதுமக்கள் கொல்லப்பட்டது; வெறுமனே இன அடையாளம், சொந்த ஊரின்

பெயரால் விதிமீறல்களுக்கு பொறுப்புகூறல் இல்லாமல் இருந்துவருவது எமது முக்கிய கவலை ஆகும்.

இலங்கை அதிகாரிகள் பல ஆண்டுகளாக மனித உரிமை மீறல்களை ஒப்புக்கொள்ளவும்,அவற்றை விசாரித்து சட்ட நடவடிக்கை எடுக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க முன்வரவும் இலங்கை அரசாங்கம் தவறியதாலும், மனித உரிமை ஆர்வலர்கள், மனித உரிமைக்காக குரல்கொடுக்கும் ஊடகங்கள் ஆகியவற்றின் மீது பதிலடி நடவடிக்கைகளை அது எடுத்ததாலும், அம்னெஸ்டி இண்டர்நேஷனலும் பிற மனித உரிமை ஆர்வலர் குழுக்களும் இலங்கையில் நடந்ததாகத் தெரிவிக்கப்படும் போர்க்குற்றங்களையும் சர்வதேச சட்டத்தின் கீழான பிற குற்றங்களையும் விசாரிக்க சுயாதீன சர்வதேச விசாரணை வேண்டும் எனக் கோரிவந்துள்ளன. 2014 மார்ச்சில் ஐநா மனித உரிமை மன்றம் நிறைவேற்றிய தீர்மானம், மனித உரிமை உயர்ஸ்தானிகர் அலுவலம் அக்குற்றங்களை விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டது. பொறுப்புகூறல் ஏற்படுத்தப்படும் நோக்கில் இந்த விசாரணை அமைய வேண்டும் என்று வலியுறுத்தியது.[2]

இலங்கையில் 2015 ஜனவரியில் ஆட்சி மாற்றம் வந்த பிறகு புதிய அரசாங்கம் ஐநாவுடனும் பிற சர்வதேச அமைப்புகளுடனும் ஒரு தீர்வை நோக்கி முன்செல்லும் ரீதியில் உத்தியோகரீதியாக வெளிப்படைத்தன்மையுடன் நடக்கத் தொடங்கியது. இன நல்லிணக்கத்தை முன்னெடுக்கவும், கடந்தகால விதிமீறல்களுக்கு பொறுப்புகூறலைக் கொண்டுவரவும், மனித உரிமை பாதுகாப்புக்கும் முன்னேற்றத்துக்கும் அவசியமன நிறுவனங்களின் சுதந்திரத்துக்கு புத்துயிர் தரவும், சர்வதேச அரங்கில் இலங்கையின் உறவுகளை பலப்படுத்தவும் புதிய அரசாங்கம் வாக்குறுதி அளித்தது.[3]

- 30/1 தீர்மானத்தின் கீழ், 'தனது கடந்த காலம் தொடர்பில் ஒரு முழுமையான அணுகுமுறையைக் கைகொள்ள இலங்கை உடன்பட்டது. விதி மீறல்கள், மனித உரிமை துஷ்பிரயோகங்கள், சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பான

---

அடைப்படையிலும் தமிழர்கள் எதேச்சதிகாரமாக கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டது; சித்ரவதையும், பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு காணாமல்போதலும், சட்டத்துக்கு அப்பாற்பட்ட தண்டனை பாணியில் ஆட்கள் கொல்லப்பட்டதும் பரவலாக நடந்துள்ளது. போர்க்குற்றம் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களை இருதரப்பினரும் செய்ததாக குற்றச்சாட்டுகள் இருந்துவருகின்றன.

[2] மனித உரிமை மன்றத் தீர்மானம் 30/1 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புகூறல் மற்றும் மனித உரிமையை மேம்படுத்துதல்' A/HRC/RES/30/1,14 ஒக்டோபர் 2015

[3] 2015 ஜனவரியில் நடந்த தேர்தலில் ஆட்சியில் இருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை வீழ்த்தி மைத்ரிபால சிறிசேன ஜனாதிபதியானார்.

குற்றச்சாட்டுகளை விசாரிக்க சிறப்பு நீதிபதியைக் கொண்ட நீதி விசாரணைப் பொறிமுறை

- உண்மை, நீதி, நல்லிணக்கம், குற்றங்கள் மீண்டும் நடப்பதைத் தவிர்த்தல் ஆகியவற்றுக்கான ஆணையம்
- காணாமல்போனவர்கள் தொடர்பான அலுவலகம் ஒன்றை உருவாக்குதல்
- நிவாரணத்துக்கான அலுவலகம் போன்றவற்றை அமைப்பதென்பது இதில் அடங்கும்.[4]

இவ்விதமான கடப்பாடுகளுக்கு அம்னெஸ்டி இண்டர்நேஷனல் மிகுந்த வரவேற்பு அளித்தது. கடந்தகால விதிமீறல்களுக்கும் துஷ்பிரயோகங்களுக்கு பொறுப்புகூறலை ஏற்படுத்தவும், எதிர்காலத்தில் இலங்கை மக்கள் அனைவரது மனித உரிமை பாதுகாப்பு அம்சங்கள் பலப்படவும் இந்த ஏற்பாடுகள் அவசியம்.

ஓராண்டு கழிந்த தற்போதைய நிலையில், உண்மை, நீதி, நிவாரணம், எதிர்காலத் தவிர்ப்பு ஆகியவற்றில் அரசாங்கம் தொடர்ந்து அக்கறை காட்டிவருகிறது. வாக்குறுதிகளை செயபடுத்துவதில் ஓரளவு முன்னேற்றம் வந்துள்ளது. தேசிய கலந்தாலோசனை நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது, பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு காணாமல்போவதிலிருந்து அனைவருக்கும் பாதுகாப்பு அளிக்கும் சர்வதேச ஒப்பந்தத்தில் இலங்கை சேர்ந்துகொண்டுள்ளது, காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம் அமைப்பதற்கான சட்டத்தை நிறைவேற்றியுள்ளது போன்றவையும் இதில் அடங்கும்.

ஆனால் இந்த முன்னேற்றம் மந்தமாக இருப்பதாகவும், சில நடவடிக்கைகளில் போதிய வெளிப்படைத்தன்மை இல்லையென்றும், கலந்தாலோசனை நடைமுறைகளுக்கு ஆரம்ப கட்டத்தில் போதிய வளங்களை ஒதுக்கவில்லையென்றும், முன்னெடுப்புகள் மக்களை உள்ளடக்கியதாகவும் ஒன்றோடொன்று ஒத்துப்போவதாகவும் இல்லை என்றும் இலங்கையின் சமூக ஆர்வலர் குழுக்களும், பாதிக்கப்பட்ட மக்களும் நியாயமாக குரலெழுப்பிவருகின்றனர்.

உண்மை, நீதி, (மீண்டும் குற்றம் நடப்பதை தவிர்ப்பது உட்பட) பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் ஆகியவற்றை பலனுள்ள வகையில் வழங்கும் பொறிமுறைகளை அமைப்பது சம்பந்தமான அம்னெஸ்டி இண்டர்நேஷனலின் ஆய்வு மற்றும் பரிந்துரைகளை இங்கே தெரிவிக்கிறோம். இந்த நான்கு பொறிமுறைகளையும் வடிவமைக்கவும் செயல்படுத்தவும் அவசியமான பத்து முக்கிய கொள்கைகளை பகுதி 1

---

[4] மனித உரிமை மன்றத் தீர்மானம் 30/1 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புகூறல் மற்றும் மனித உரிமையை மேம்படுத்துதல்' A/HRC/RES/30/1,14 ஒக்டோபர் 2015

அடையாளப்படுத்தும், அந்த கொள்கைகள் ஒவ்வொரு பொறிமுறையிலும் எவ்வாறு பிரதிபலிக்க வேண்டும் என்பதை பின்வரும் பிரிவுகள் விளக்கும். நீதி பரிபாலனைப் பொறிமுறை (பகுதி 2), உண்மை, நீதி, நல்லிணக்கம், மீண்டும் நடப்பது தவிர்த்தல் ஆகியவற்றுக்கான ஆணையம் (பகுதி 3), காணாமல்போனோருக்கான அலுவலகம் (பகுதி 4), இறுதியாக நிவாரணத்துக்கான அலுவலகம் (பகுதி 5).

## வழிமுறை

ஒரு பத்து ஆண்டு காலம் இலங்கைக்கு செல்ல முடியாமல் இருந்த எமது அமைப்பினர், 2015ல் மீண்டும் அங்கு செல்லத் துவங்கி அரசாங்க அதிகாரிகளை சந்தித்தனர்.[5] பொறுப்புகூறலில் இலங்கை காட்டும் இந்த புதிய அக்கறையும் கடப்பாடும்தான் அந்த சந்திப்புகளில் முக்கியமாக விவாதிக்கப்பட்டது.

2015 டிசம்பரிலும் 2016 மார்ச்சிலும் அம்னெஸ்டி இண்டர்நேஷனலின் பிரதிநிதிகள் இலங்கைக்கு மீண்டும் சென்று கூடுதல் பணிகளை மேற்கொண்டனர். அரசு அதிகாரிகள், ஆலோசகர்கள், மனித உரிமை பாதுகாப்புக்கும் மேம்பாட்டுக்கும் ஏற்படுத்தப்பட்ட அமைப்புகளில் நியமிக்கப்பட்டவர்கள், இலங்கையில் பொறுப்புகூறல் இல்லாத நிலையை முடிவுக்கு கொண்டுவர வழிகாட்டுபவர்கள், சட்டத்துறை பிரதிநிதிகள், சிவில் சமூக ஆர்வலர்கள், தலைநகரம் கொழும்பு, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, புத்தளம், வவுனியா ஆகிய ஊர்களில் மனித உரிமை பாதிப்புகளை சந்தித்த மக்கள் ஆகியோரையும் எமது பிரதிநிதிகள் சந்தித்து இருந்தனர்.

எமது பிரதிநிதிகள் குறிப்பிட்டவர்களுடன் தனியாக பேசியும், அறுபது பேருக்கும் அதிகமானோருடன் குழு சந்திப்பு நடத்தியும் இருந்தனர். உண்மை, நீதி, நிவாரணம், குற்றம் மீண்டும் நடக்காமல் தவிர்க்கும் உத்தரவாதம் போன்றவை தொடர்பில் அவர்களது எண்ணம் எதிர்பார்ப்பு பற்றி மதிப்பிடுவதும், செயலூக்கம் உடைய, பலனளிக்கக்கூடிய வழிமுறையை ஏற்படுத்த அம்னெஸ்டி இண்டர்நேஷனல் எந்தெந்த வகையில் உதவ முடியும் என்பதை தீர்மானிப்பதும் இந்தப் பணியின் நோக்கமாக இருந்தது.

இலங்கையில் நல்லிணக்க பொறிமுறைக்கான கலந்தாலோசனை பணிக்குழுவிடம் 2016 ஜூனில் அம்னெஸ்டி இண்டர்நேஷனல் சமர்ப்பித்திருந்த பரிந்துரைகளின் அடிப்படையில் இவ்விஷயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

---

[5] இடைப்பட்ட காலத்தில் இலங்கையின் மனித உரிமை ஆர்வலர்களுடனும், பாதிக்கப்பட்ட மக்களுடனும் அம்னெஸ்டி இண்டர்நேஷனல் தொடர்ந்தும் நெருக்கமான தொடர்பில் இருந்துவந்தது. ஆனால் இலங்கைக்கு வெளியில்தான் இவர்களைச் சந்திக்க முடிந்தது. தவிர தொலைவில் இருந்து தொடர்பாடித்தான் இலங்கையில் நிலவிய மனித உரிமை நெருக்கடி பற்றி தகவல் திரட்ட முடிந்தது. இலங்கையில் பணியாற்றியவர்கள் மிகுந்த தைரியத்துடன் பெரிய ஆபத்துக்கு மத்தியில்தான் இந்தப் பணியைச் செய்தார்கள். சர்வதேச அமைப்புகளிடம் மனித உரிமை நிலவரம் பற்றிய தமது கவலைகளை வெளியிட்டதற்காக இவர்கள் தூற்றப்பட்டும், கைதுசெய்யப்பட்டும், ஏன் உடல்ரீதியாக துன்புறுத்தப்பட்டதும் உண்டு.

அம்னெஸ்டி இண்டர்நேஷனல் மனித உரிமைகளுக்கான ஒரு உலகளாவிய இயக்கம். எங்கோ ஒருவருக்கு நீதி கிடைத்தாலும் அது எங்கள் அனைவருமே முக்கியம்.


**எம்மைத் தொடர்புகொள்ள**

info@amnesty.org

+44 (0)20 7413 5500

**கலந்துரையாடலில் பங்கேற்க**

www.facebook.com/AmnestyGlobal

@AmnestyOnline

# இலங்கை: சரியான தெரிவுகளை செய்தல்

## உண்மையையும் நீதியையும் நிலைநாட்டவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கவும் பலனளிக்கக்கூடிய பொறிமுறைகளை நிறுவுதல்

*ஐநா மனித உரிமை மன்றத் தீர்மானம் 30/1ஐ 2015 ஒக்டோபரில் இலங்கை கொண்டுவந்து ஏற்றுக்கொண்டபோது, நாட்டில் நெடுங்காலமாக நீடித்துக்கொண்டிருக்கும் வன்முறையையும் மனித உரிமை மீறலுக்கு பொறுப்புகூறல் இல்லை என்ற நிலையையும் முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்பதை அரசாங்க அதிகாரிகள் கடைசியில் ஒருவழியாக ஏற்றுக்கொண்டார்கள். மாற்றத்துக்கான ஒரு இலட்சியமிக்க செயல் திட்டத்தை ஏற்றுக்கொள்வதாக அரசாங்கம் அறிவித்தது. கடந்த காலங்களில் நடந்த குற்றங்களுக்கு சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்து, உண்மை வெளிகொணரப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என அரசாங்கம் வாக்குறுதி அளித்தது. அப்படியான குற்றங்களை எதிர்காலத்தில் தவிர்க்கும் சீர்திருத்தங்கள் செய்யப்படும் என்றும் உறுதியளித்தது.*

*ஓராண்டு கழிந்த தற்போதைய நிலையில், உண்மை, நீதி, நிவாரணம், எதிர்காலத் தவிர்ப்பு ஆகியவற்றில் அரசாங்கம் தொடர்ந்து அக்கறை காட்டிவருகிறது. ஆனால் இந்த முன்னேற்றம் மந்தமாக இருப்பதாகவும், சில நடவடிக்கைகளில் போதிய வெளிப்படைத்தன்மை இல்லையென்றும், கலந்தாலோசனை நடைமுறைகளுக்கு ஆரம்ப கட்டத்தில் போதிய வளங்களை ஒதுக்கவில்லையென்றும், முன்னெடுப்புகள் மக்களை உள்ளடக்கியதாகவும் ஒன்றோடொன்று ஒத்துப்போவதாகவும் இல்லை என்றும் இலங்கையின் சமூக ஆர்வலர் குழுக்களும், பாதிக்கப்பட்ட மக்களும் நியாயமாக குரலெழுப்பிவருகின்றனர்.*

*உண்மை, நீதி, (மீண்டும் குற்றம் நடப்பதை தவிர்ப்பது உட்பட) பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் ஆகியவற்றை பலனுள்ள வகையில் வழங்கும் பொறிமுறைகளை அமைப்பது சம்பந்தமான அம்னெஸ்டி இண்டர்நேஷனலின் ஆய்வு மற்றும் பரிந்துரைகளை இங்கே தெரிவிக்கிறோம். இந்த நான்கு பொறிமுறைகளையும் வடிவமைக்கவும் செயல்படுத்தவும் அவசியமான பத்து முக்கிய கொள்கைகளை அம்னெஸ்டி இண்டர்நேஷனல் அடையாளப்படுத்துகிறது, நீதி பரிபாலணைப் பொறிமுறை, உண்மை, நீதி, நல்லிணக்கம், மீண்டும் நடப்பது தவிர்த்தல் ஆகியவற்றுக்கான ஆணையம், காணாமல்போனோருக்கான அலுவலகம், இறுதியாக நிவாரணத்துக்கான அலுவலகம் என திட்டமிடப்பட்டுள்ள ஒவ்வொரு பொறிமுறையிலும் அந்த கொள்கைகள் எவ்வாறு பிரதிபலிக்க வேண்டும் என்பது விவரிக்கப்படுகிறது.*

INDEX: ASA 37/4902/2016
OCTOBER 2016
LANGUAGE: TAMIL

amnesty.org